பலங்கொட நகர சபை - 2021

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பலங்கொட நகர சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாயச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர கட்டளை சட்டத்தின் (255 அதிகாரம்) 181(1) உப பரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் பலங்கொட நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கானஅடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னையஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | உரிய திகதிக்கு முன் வீதவரி செலுத்தாததன் மீது 2021 திசெம்பர் 31 திகதிக்கு அறவிட வேண்டிய தண்டப்பணம் கணக்கீடு செய்யாததனால் மீளாய்வாண்டு இறுதியில் வருமான கடன்படுனர் மற்றும் திரண்ட நிதியம் ரூபா 1,262,127 குறைத்து காட்டப்பட்டிருந்தது. | இந்த தவறை 2022 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஜர்னல் குறிப்பு இலக்கம் 01 ஊடாக சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | கணக்குகளை சரி செய்ய வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றினுள் நடைமுறையல்லாத பொறுப்பின் கீழ் கடன் மூலதனமாக சபையினால் பெற்றுக் கொண்ட நீண்ட கால கடன் மீதி ரூபா 93,121,442 காட்டப்பட்டிருந்த போதும், அதில உள்ளடங்கிய 2022 ஆண்டின் போது செலுத்த வேண்டிய கடன் மூலதன பகுதி ரூபா 6,499,491 யினை நடைமுறை பொறுப்பாக வேறாக காட்டப்பட்டிருக்கவில்லை. | கடன் மூலதனத்தில் நீண்ட கால மற்றும் நடைமுறை பகுதியை 2022 ஆண்டு முதல் சரியாக வெவ் வேறாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்குகளை சரி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்குரியதாக 2022 ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 51,934 யினை ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யாததனால் செயற்பாட்டு செலவினம் மற்றும் கடன்கொடுனர் மீதி அப் பெறுமதியால் குறைத்து காட்டப்பட்டிருந்தன. | இந்த தவறை இலக்கம் 03 ஜர்னல் குறிப்பு ஊடாக 2022 ஆண்டின் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | கணக்குகளை சரி செய்ய வேண்டும். |
| (ஈ) | 2020 ஆண்டு பண்டக கணிப்பீட்டு பரிந்துரை பிரகாரம் 2021 ஆண்டில் எலவிற்பனை செய்த உபகரணங்களின் கிரயம் ரூபா 271,763 யினை சொத்துக்கள் கணக்குகளிலிருந்து அகற்றி இருக்காத காரணத்தால் 2021 திசெம்பர் 31 திகதிக்கு இருப்பு மீதி ரூபா 146,913 யினால் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்கள் மீதி ரூபா 124,850 யினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தன. | இந்த தவறை இலக்கம் 04 ஜர்னல் குறிப்பு ஊடாக 2022 ஆண்டின் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | பராதீனம் செய்த சொத்துக்களில் கிரயத்தை சொத்துக்கள் கணக்குகளிலிருந்து அகற்ற வேண்டும். |
| (உ) | நிலையான வைப்புக்களிற்காக மீளாய்வாண்டிற்கு பெற வேண்டிய வட்டி ரூபா 129,774 இனை கணக்கீடு செய்யாததனால் ஆண்டில் செயற்பாட்டு வருமானம் மற்றும் நடைமுறை சொத்துக்கள் அப் பெறுமதியினால் குறைத்து காட்டப்பட்டிருந்தன. | நிலையான வைப்புகளிற்கான வட்டி இனங்காணுதல் அவை முதிர்ச்சியடையும் போது மேற்கொள்வதாக. | ஆண்டிற்குரிய வட்டி வருமானத்தை கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| இருப்பு பேரேட்டு மற்றும் இருப்பு களஞ்சிய கட்டுப்பாட்டு கணக்கிடையில் ரூபா 1,605,502 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | எதிர்காலத்தில் இந்த தவறை சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் மீதிகள் அதன் உடன் தொடர்புடைய துணை பதிவேடுகளுடன் இணக்கஞ் செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 15,063,975 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 23,422,086 ஆனது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரியும் வரியும் | | |
| | மீளாய்வாண்டிற்குரிய நிலுவை வீதவரியும் வரியும் ரூபா 2,418,880 மற்றும் கடந்த ஆண்டுகளிற்குரிய நிலுவை வீதவரி வரியும் ரூபா 3,443,614 இனை 2022 மார்ச் 31 திகதியன்றும் அறவிட சபைக்கு இயலாதிருந்ததுடன், அதற்கான காலப் பகுப்பாய்வொன்றையும் தயாரத்திருக்கவில்லை. | நிலுவை வீதவரி போன்று நிகழ் ஆண்டில் வீதவரி அறவிடுவதற்கு செயற்படுவதுடன் நிலுவை கூடுதலாக காணப்படும் ஆதனங்களுக்காக கடிதம் மூலம் அறிவூட்டப்பட்டுள்ளது. மேலும் விஷேட நடமாடும் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தி 2022 ஆண்டில் ஆரம்பம் முதல் வீதிவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| | இம்பீரியல் திரைப்பட மண்டபத்திற்கு முன்னால் அமைந்துள்ள கூட்டுத் தொகை 38.43 வர்க மீட்டர் ஆன 14 அனுமதியற்ற கடையறைகளிற்காக 06 மாதங்கள் முதல் 29 மாதங்கள் வரை கால எல்லைனுள் அறவிடாது காணப்பட்ட நிலுவை வாடகை ரூபா 199,250 இனை 2022 ஏப்ரில் வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அக் கடையறைகளிற்காக ஒரு தினத்திற்கு ரூபா 50 வீதம் மாதத்திற்கு ரூபா 1,500 கடையறை வாடகையொன்று அறவிடப்பட்டுக்கொண்டு இருந்ததுடன் அவ் வாடகையை 05 வருடத்திற்கு ஒரு முறை திருத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவற்றை நடாத்தி செல்லும் நபர்களால் சிறிய இடமொன்றில் தற்காலிகமா நிர்மாணித்துக் கொண்டுள்ள சிறிய கடையறைகள் ஆகையால், நகர சபையினால் அவ் கடையறைகளிலிருந்து நடைபாதை வியாபாரிகளிடமிருந்து அறவிடும் கட்டணத்தை அடிப்படையில் மாதாந்த வாடகை அறவிடப்படுகின்றது. | நிலுவை வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபை அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| தேவைபாட்டை இனங்காணாது மற்றும் உரிய தொழில்நுட்ப மதிப்பீட்டின்றி 2017 ஒக்தோபர் 25 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 98,450 பெறுமதியான 110 மின் குமிழ்கள் மற்றும் 2020 பெப்ரவரி 18 திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 257,500 பெறுமதியான 50 மின் குமிழ்கள் 2022 மார்ச் 31 திகதி வரையும் விளைவற்று நிலவியது. | வீதி விளக்குகளிக்காக 2017 ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட குமிழ்களுக்கான பராமரிப்பு செலவினம் அதிகரித்தமை, விளையாட்டு மைதானத்தை ஒளியூட்ட கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுடன் சேர்த்து பயன்படத்த வேண்டிய ஏனைய உதிரிப் பாகங்களுக்காக விலை மனு கோரிய போதும் அவை சந்தைனுள் பெற்றுக்கொள்ளும் பற்றாக்குறை நிலவியதும் இந்த நிலைமைக்கு காரணமாக அமைந்ததாக. | தேவைபாட்டை தெளிவாக இனங்கண்டு பண்டங்கள் கொள்வனவு செய்ய வேண்டியதுடன், சொத்துக்கள் பயனுறுதிமிக்கதாக பயன்படுத்த வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**பாதீட்டு கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பாதீட்டை அங்கீகரித்துக் கொள்ள சபை செயற்பட்டிருக்காததால் சபரகமுவ மாகாண ஆளுனரால் நகர சபையின் 2021 ஆண்டின் கடமைப்பாடுகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்ல மீண்டுவரும் செலவினங்களை செய்யும் அதிகாரத்தை மாத்திரம் இலக்கம் 2211/57 கொண்ட வர்த்தமானியூடாக சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. சபையின் கடமைகளின் தொடர்ந்தியங்கும் தன்மைக்காக நடவடிக்கை எடுத்தல் 255 ஆம் அதிகாரத்தினால் நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிகராம் தவிசாளர் உள்ளிட்ட அங்கத்தவர்களின் கைவிடப்பட முடியாத பொறுப்பொன்றாக இருக்கையில் குறித்த நபர்கள் பொறுப்புடன் செயற்படாததனால் 2021 ஆண்டு மீண்டுவரும் செலவினங்களை மேற்கொள்ள சட்ட அதிகாரம் இல்லாமையால் வருடாந்த பாதீட்டின் மூலம் ஒதுக்கியிருந்த ரூபா 53,075,000 ஆன அபிவிருத்தி நடவடிக்கைகளை செயற்படுத்த முடியாமலிருந்தன. | 2021 வருடாந்த பாதீடு தொடர்பாக மதிப்பிற்குரிய தவிசாளர் உள்ளிட்ட மதிப்பிற்குரிய அங்கத்தவர் சபை எடுக்கும் அரசியல் ரீதியான கொள்கைகள் மற்றும் தீர்மானங்கள் தாக்கம் செலுத்துவதாக மற்றும் சுட்டிக் காட்டிய விடயங்கள் உண்மையானதாக. | 255 ஆம் அதிகாரம் நகர் சபை கட்டளைச் சட்டம் பிரகாரம், சபையின் நடவடிக்கைகளின் தொடர்ந்தியங்கும் தன்மைக்காக தவிசாளர் உள்ளிட்ட அங்கத்தவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |